இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

முன்பள்ளிக் கல்விச் சான்றிதழ் நிகழ்ச்சித் திட்டம் 2017 / 2018

# ESC 1132 / EPC1332 முன்பள்ளிக் கல்வித் தத்துவங்கள்

காலம் : 2 மணித்தியாலங்கள்

---

திகதி : 22.04.2019 நேரம் : மு.ப 10.00 – நண்பகல் 12.00

---

பகுதி I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி II இல் ஏதேனும் மூன்று வினாக்களுக்கும் விடையளிக்குக.

## பகுதி I

1. 'பிள்ளை மையக் கல்வி' பற்றி மரியா மொண்டிசூரி அவர்களின் ஐந்து (5) கருத்துக்களைத் தருக?
2. நாட்பராமரிப்பு நிலையமொன்றின் தொழிற்பாடுகள் ஐந்தினைக் (5) கலந்துரையாடுக?
3. 'பிள்ளைக்கு மிகவும் விருப்பமான ஆர்வம்' என்பதனால் நீங்கள் கருதுவது யாது?
4. 'முன்பள்ளிக் கல்வி' எனும் பதத்தினை வரையறுக்குக.
5. இலங்கையில் காணப்படுகின்ற முன்பள்ளிக் கல்வி தொடர்பான பிரச்சினைகள் ஐந்தினைப் (5) பட்டியலிடுக?
6. 'இலத்திரனியல் சாதனங்கள் தமது பிள்ளைகளின் கல்விக்கு துணைபுரிவதாக பெற்றோர்கள் நம்புகின்றனர். எனினும் முன்பள்ளிப் பிள்ளைகளால் எந்த ஒரு இலத்திரனியல் சாதனங்களுமின்றி நன்றாகக் கற்க முடியும்'. இக்கூற்றினை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா? உமது விடையை நியாயப்படுத்துக.
7. உடலியல் ரீதியான தண்டனை பற்றி தத்துவவியலாளர்களின் வேறுபட்ட கருத்துக்களை சுருக்கமாக விளக்குக?
8. இலங்கையில் உள்ள முன்பள்ளி ஆசிரியர்களின் மூன்று (03) பிரதான வகிபாகங்களைக் குறிப்பிடுக?

**(08X05=40 புள்ளிகள்)**

## பகுதி II

9. அ) இலங்கையில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சியின் முக்கியத்துவம் யாது?
(08 புள்ளிகள்)

ஆ) இலங்கையில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் இரண்டு (02)பயிற்சிகளைக் குறிப்பிட்டு அவற்றின் தரம் பற்றிய உங்களது கருத்துக்களைத் தருக?

(12 புள்ளிகள்)

10. அ) ஐக்கிய இராச்சியத்தின் முன்பள்ளிக் கல்வியின் நோக்கங்கள் ஐந்தினை சுருக்கமாக விளக்குக?
(08 புள்ளிகள்)

ஆ) இலங்கையில் முன்பள்ளிக்கல்விக்குப் பொருத்தமான நோக்கங்கள் ஐந்தினை(5) முன்மொழிக? (இலங்கையின் சமூக கலாசார பொருளாதார நிலையை கருத்திற் கொண்டு)
(12 புள்ளிகள்)

11. அ) முன்பள்ளி வயதுப் பிள்ளைகளின் கல்வி பற்றிய ரூசோ , மொண்டிசூரி ஆகியோரின் இவ்விரு கருத்துக்களைத் தருக?
(04 புள்ளிகள்)

ஆ) இக்கருத்துக்கள் எவ்வாறு ‘பிள்ளை மையக்கல்வி’யில் செல்வாக்கு செலுத்துகின்றனவென சுருக்கமாக விளக்குக?
(08 புள்ளிகள்)

இ) முன்பள்ளிக் கல்வியில் ‘பிள்ளை மையத்தின்’ முக்கியத்துவத்தினை விபரிக்குக?

(08 புள்ளிகள்)

12. அ) இலங்கையின் முன்பள்ளிக் கல்வியின் வரலாற்றுப் பின்னணியைச் சுருக்கமாகக் குறிப்பிடுக?
(08 புள்ளிகள்)

ஆ) இலங்கையின் தற்கால முன்பள்ளிக் கல்வி அமைப்பின் குறிப்பாக பண்புகள் ஐந்தினை (5) பொருத்தமான உதாரணங்களுடன் விபரிக்குக?
(12 புள்ளிகள்)

13. ‘இலங்கையின் முன்பள்ளிகள் அனைத்திற்கும் பொதுவான கலைத்திட்டமொன்று தேவையாகும்’.
அ) மேலுள்ள கூற்றினை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா? உமது விடையை நியாயப்படுத்துக?
(10 புள்ளிகள்)

ஆ)முன்பள்ளியில் ஆசிரியர்-பெற்றோர் தொடர்பு பேணப்பட வேண்டியதன் முக்கியத்தவத்தினை விபரிக்குக?
(10 புள்ளிகள்)

*பதிப்புரிமை பெற்றது*